## தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

முன்னிலை

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண். NC1401/F/2019 (SA9946/F/2018)**

**திரு V.முனியப்பன் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**திருவண்ணாமலை மண்டலம்,**
**திருவண்ணாமலை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 08.10.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 15.11.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 31.12.2018 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 10.04.2019 |
| ஆணை நிறைவேற்றப்படாமை மனு நாள் | 26.06.2019 |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் திரு V.முனியப்பன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருவண்ணாமலை மண்டலம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 08.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மெமோ.எண்.19481/PS3/TNSTC (VPM - Divr.II) 2000,

Dated. 05.12.2000 உத்தரவின் மூலம் ஓட்டுநர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு வேலூர் மண்டலத்தில் 29.12.2000 அன்று பயிற்சிக் கட்டணம் ரூ.5000/- மற்றும் ரூ.1000/- மொத்தம் ரூ.6000/- செலுத்தி ஓட்டுநர் உரிமம் மற்றும் முதலுதவி சான்று உள்ளிட்ட ஆவணங்கள் சரிபார்த்த பின்னர் கழக பயிற்சிப் பள்ளியில் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டதாகவும் மேற்படி ஓட்டுநர் பயிற்சி முடிக்கப்பட்டு எந்த தேதியில் எந்த பணிமனையில் ஓட்டுநராக பணி நியமனம் செய்யப்பட்டது என்ற விபரம், மேற்படி ஓட்டுனராக பணி நியனமம் செய்யப்பட்ட நாள் முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் வரை மாத வாரியாக பணிபுரிந்த பணி நாட்கள் பட்டியல் மற்றும் பணி நிரந்தர உத்தரவு நகல் பற்றிய விபரம், பயிற்சி முடித்து 2001-ல் ஓட்டுநராக பணிநியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் வரை தினக்கூலி அடிப்படையில் வழங்கப்பட்ட மாத சம்பளத்தில் வருங்கால வைப்புநிதி எவ்வளவு பிடித்தம் செய்யப்பட்டது மாத வாரியான பட்டியல் விபரம் தொடர்புடைய தகவல்களை 15 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருவண்ணாமலை மண்டலம், திருவண்ணாமலை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 15.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருவண்ணாமலை மண்டலம், தலைமையகம், திருவண்ணாமலை அவர்களுக்கு தாக்கல் செய்தார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 31.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் 10.04.2019 தேதியிட்ட ஆணை வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 30 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 26.06.2019 தேதியிட்டு ஆணை நிறைவேற்றப்பட்டாமை மனுவினை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக ஆஜரான மேல்முறையீட்டாளர், தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு ஆணையத்தின் 10.04.2019 தேதியிட்டு 30 தினங்களுக்குள் தகவல் வழங்கவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டும் இதுநாள்வரைப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தில் எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் / துணை மேலாளர், மேல்முறையீட்டாளரின் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு முழுமையான தகவல் வழங்கப்படுமென்று ஆணையத்தில் எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. வாத, பிரதிவாதங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் பரிசீலிக்கையில், மேல்முறையீட்டாளருக்கு இதுநாள்வரை எவ்விதத் தகவலும் முழுமையாக பொது அதிகார

அமைப்பினரால் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 08.10.2018 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 08.10.2018 தேதியிட்ட மனுவிற்கு எவ்விதமான தகவலும் வழங்காத சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் அதிகபட்ச அபராதம் ரூ.25,000/- ஏன் விதிக்கலாகாது என்பதற்குரிய எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலரை ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC1401/F/2019 (SA9946/F/2018)</u>

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
திருவண்ணாமலை மண்டலம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு V.முனியப்பன்,
எண்.5/45, பெருமாள் கோவில் தெரு,
பனையூர் கிராமம், & அஞ்சல்,
ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 632 518.

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020